**IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES, CHENNAI**

---

**M.C.O.P.No.1820/2021**

Deposition of Witness : PW 1
Name : C. Palaraman
Father/Husband Name : Chinnaraj
Age : 52 years
Designation : ----
Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 05th day of December 2024.

---

முதல் விசாரணை -

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். என்னுடைய தரப்பில் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதனை என்னுடைய முதன்மை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| Sl.No. | Descriptions | Nature of documents | Remarks |
|---|---|---|---|
| 1 | Accident Register | Photocopy | Ex.P.1 |
| 2 | FIR | Photocopy | Ex.P.2 |
| 3 | Discharge summary | Photocopy | Ex.P.3 |
| 4 | Aadhaar card | Photocopy | Ex.P.4 |
| 5 | PAN card | Photocopy | Ex.P.5 |
| 6 | Bank passbook xerox | Photocopy | Ex.P.6 |

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை -

விபத்து தொடர்பாக என் மனைவிதான் புகார் கொடுத்தார். புகார்தாரர் என் மனைவி என்பதால் எங்களுக்கு சாதகமாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல, உண்மையைத்தான் புகாரில் கூறியுள்ளார். மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை, இறுதியறிக்கை போன்ற ஆவணங்கள் வழக்கிற்கு எதிராக உள்ளதால்

நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனம் ஓட்ட பழகுனர் உரிமம் வைத்திருந்தேன், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இருசக்கர வாகனத்தை நான் மட்டும்தான் ஓட்டி சென்றேன். விபத்து நடந்தது திருநின்றவூரிலிருந்து வேப்பம்தட்டிற்கு செல்லும் பிரதான சாலை. எனது தொழில், வருமானம் மற்றும் வயதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். என்னுடைய வண்டியில் முன்பக்கம்தான் முழுவதும் சேதம் என்றால் சரி. 1வது எதிர்மனுதாரர் வாகனத்திற்கும் முன்பக்கம்தான் சேதம் என்றால் அவ்வளவாக சேதமில்லை. விபத்து இரு வாகனங்களும் நேருக்கு நேராக மோதி ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடப்பதற்கு முன்பு எதிரே வந்த வாகனத்தை நான் பார்க்கவில்லை. எதிர்திசையில் வந்த 1வது எதிர்மனுதாரர் வாகனம் ஒரு ஆட்டோவை முந்தி செல்ல முயற்சித்து எதிர் திசையில் ஏறி வந்து என்னுடைய வண்டியில் மோதி விபத்து ஏற்பட்டது என்று சாட்சி கூறுகிறார். வண்டி வருவதை முன்கூட்டியே பார்த்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் நான் என்னுடைய பாதையில் சென்றுக்கொண்டிருந்தேன், அவர் திடீரென்று முந்தி செல்வதற்காக எனது பக்கம் ஏறிவந்து மோதுவார் என்று எனக்கு தெரியாது. நான் சாலையை கவனித்து வாகனத்தை ஓட்டாததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மீது தவறு உள்ளது என்பதால்தான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மூன்று நாட்கள் மட்டும்தான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றும், தொடர் சிகிச்சை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுவதுமாக சரியாகிவிட்டது என்றால் தற்போது வலி உள்ளது. எனக்கு விபத்தினால் வருமான இழப்பு

மற்றும் நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Sd./
Signature of witness

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date: 05.12.2024

Sd./
II Judge,
Court of Small Causes, Chennai